மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

2026–ம் ஆண்டு ஜனவரி மாதம் 22–ம் நாள் வியாழக்கிழமை 1, 2 பிரதிவாதிகள் தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு. சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது.			
பெயர்:	**முருகேசன்**	தொழில்:	
த.பெ:		சமயம்:	
கிராமம்:		சாதி:	
வட்டம்:		வயது:	

22.01.2026 OS.34/2020 வா.சா.2 முருகேசன்

<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

1) நான் குருசாமியின் தம்பி மகன் என்றால் அண்ணன் மகன் ஆவேன். 21.07.1967 ம் தேதியிட்ட பாகவிஸ்தி பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி பாகவிஸ்தி ஆவணத்தை வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் வாதிகள் தாக்கல் செய்ததாக என்னிடம் சொன்னார்கள். அந்த பாகவிஸ்தி ஆவணத்தில் நானும் ஒரு தரப்பினர் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் அசல் யார் வசம் உள்ளது என்றால் 1ம் வாதி வகையறா வசம் உள்ளது.

2) மேற்படி 21.07.1967 ம் தேதியிட்ட பாகவிஸ்தி பத்திரம் வாதிகள் தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன பாகவிஸ்தி பத்திரத்தில் தாவா புல எண் குறிப்பிடபடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து பாகவிஸ்தியில் எத்தானவது இலக்கமாக யாருக்கு ஒதுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடக்கே புல எண்.269/37 உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது வீட்டிற்கு அருகில் எனது பங்காளிகள் வீடுகள் உள்ளது.

3) மேற்படி புல எண். 269/37 ஆனது பட்டா எண். 345 ஆக பொன்னுச்சாமி மக்கள் துரைச்சாமி –1, சுப்பிரமணி –2, குருசாமி –3 ஆகியோர் பெயரில் கூட்டு பட்டா உள்ளது என்றால் சரியல்ல கூட்டு பட்டா இருந்தது தற்போது பிரிக்கப்பட்டுள்ளது. புல எண். 269/37 ஆனது எத்தனை உட்பிரிவுகளாக உள்ளது என்றால் இரண்டு உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. மேற்படி உட்பிரிவு ஏற்பட்டதற்கான கணினி பட்டா என் வசம் உள்ளது என்றால் என்னிடம் பட்டா இல்லை. அந்த சொத்திற்கான

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.01.22 17:44:25 +0530

பட்டா வாதி வகையறா வசம் உள்ளது என்றால் யார் பெயரிலும் பட்டா இல்லை.

4) நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்திற்கு கிழக்கே 1998 ம் ஆண்டு வரை எங்கள் வீடு இருந்து வந்தது என்று கூறியுள்ள நிலையில் அந்த வீட்டிற்கான பட்டா, வீட்டு வரி ரசீது, மின் இணைப்பு ஆவணங்கள் உள்ளதா என்றால் எந்த ஆவணமும் என்னிடம் இல்லை. தாவா சொத்திற்கு தெற்கே பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள நிலையில் தாவா சொத்தும் அதற்கு தெற்கே உள்ள சொத்தும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது தான் என்றால் சரியல்ல.

5) தாவா சொத்திற்கும் தாவா சொத்திற்கு தெற்கே உள்ள சொத்திற்கும் சர்வே எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்து இந்த பிரதிவாதிகளின் மூதாதையர் செருவம்மாளுக்கு பதிவு கிரைய பத்திரப்படி பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வடக்கே உள்ள புல எண். 269/37 தான் பொன்னுச்சாமி வகையறாவிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்து பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றாலும் நான் 1ம் வாதியின் அண்ணன் மகன் என்ற அடிப்படையில் 2, 3 வாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(மறுவிசாரணை இல்லை).

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.01.22 17:44:35 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam